16—

சலுகைகள்

***31118—திரு. ராதாரவி:**

மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கு, அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் சலுகைகளைப் போல சலுகைகளை வழங்கும் கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்திலே பணியாற்றும் பணியாளர்களுக்கு, அரசு ஊழியர்களுக்குத் தருகின்ற அத்தனைச் சலுகைகளும் தரப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 17, திரு. டி. மணி, மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.*

17—

படகு கட்டும் தளம்

***34900—திரு. டி. மணி:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், சின்னமுட்டம் பகுதியிலுள்ள படகு கட்டும் தளம் பழுதடைந்துள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) அதனைச் சீரமைக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.*